Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 07, 2023

செவ்வாய்க்கிழமை நவம்பர் 07, 2023 | ஒளி: 09 கதிர் 122 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE




## மஞ்சள் காஸில் மாற்றமில்லை

லாஃப்ஸ் சமையல் எரிவாயு விலையை அதிகரிக்காமல் இருப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## சிறுவர்களுக்கு மாரடைப்பு அபாயம்

இலங்கையில் சிறுவர்களுக்கு மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாடசாலை பிள்ளைகள் மத்தியில் உடல் எடை அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## தங்க எம்.பி தராசில் இருந்து நீக்கம்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தவிசாளர் எம்.

தொடர்ச்சி P2

## 54 வகையான மருந்துகள் அடுத்தவாரம் வரும்

புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோய்களுக்கான மருந்துகள் உள்ளிட்ட 54 வகையான அத்தியாவசிய மருந்துகள் அடுத்த வாரத்திற்குள் நாட்டிற்கு கிடைக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொடர்ச்சி P2



### இலுப்பைக்குளத்தில் தமிழர்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில்

# இரண்டு புத்தர் சிலைகள் வைப்பு

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் தமிழர்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் திங்கட்கிழமை (06) காலை புத்தர்சிலையொன்று வைக்கப்பட்டுள்ளது. திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியின் இலுப்பைக்குளம் பகுதியில் தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நிர்மாணிக்கப்பட்டு வந்த பொரலுகந்த ரஜமஹா விகாரைப்பகுதியில் பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள மக்களினால் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## அரவம் தீண்டியதில் புது மணமகன் மரணம்

ரீ.எல்.ஜவ்பர்கான்

கரடியனாறு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட புளுட்டுமானோடை பிரதேசத்தில் பாம்பு தீண்டி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை

தொடர்ச்சி P2

## "ரணிலின் தந்திரோபாயம் தமிழர்களை பலவீனப்படுத்தும்"

பு.கஜிந்தன்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தந்திரோபாயம் தமிழர்களை மேலும் பலவீனப்படுத்தும் என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### டயானா, சஞ்சய் பெரேரா, ரோஹன பண்டார

## சபையின் கௌரவத்துக்கு பங்கம் விளைவித்துள்ளனர்



இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்சய் பெரேரா மற்றும் ரோஹன பண்டார ஆகியோர் பாராளுமன்ற வளாகத்தில் அமளியில் ஈடுபட்டு,

தொடர்ச்சி P2



## "சீன கடல் உணவுகளை இறக்குமதி செய்யோம்"

பு.கஜிந்தன்

சீனாவில் இருந்து இலங்கைக்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது. விசேடமாக வடக்கு மாகாணத்திற்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது என இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வடக்கில் முதலிட சீனா கடும் ஆர்வம்


எம்.றொசாந்த்

சீன தொழிற்துறை முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக உள்ளனர் என தெரிவித்த இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங், வடக்கு மக்களும் அதனை வரவேற்க தயாராகவுள்ளனர் என தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# கொழும்பு கிரிக்கெட்டில் கடும் சர்ச்சை

## "தனக்கு எதுவும் தெரியாது"



இலங்கை கிரிக்கெட்டுக்கான இடைக்கால குழு நியமனம் தொடர்பில் அரசாங்கத்திற்கோ அல்லது தமக்கோ எதுவும் தெரியாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திங்கட்கிழமை (06) காலை தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க இடைக்கால கிரிக்கெட் குழுவொன்றை நியமித்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பில் அமைச்சரின் வினவலுக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## "மாற்றுவேன்"



இலங்கையின் கிரிக்கெட்டை இலங்கை கிரிக்கெட் ரசிகர்கள் நேசிக்கும் ஒன்றாக மாற்றுவேன் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் இடைக்கால குழுவின் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு தன்னாலான அனைத்தையும் செய்வேன் என உறுதியளித்துள்ள அவர் நான் கிரிக்கெட்டின் தரத்தை உயர்த்துவது குறித்து நேரடி கவனம் செலுத்துவேன் நிர்வாக விடயங்கள் குறித்து குழுவில் உள்ள ஏனையவர்கள் கவனம் செலுத்துவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டிற்கான புதிய பிராண்டை அறிமுகப்படுத்துவேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அழைத்து விசாரணை



விளையாட்டு அமைச்சின் செயலாளர் ஜனாதிபதி அலுவலகத்திற்கு திங்கட்கிழமை (06) அழைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என அறியமுடிகின்றது.

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் தற்போதைய நிலைமை மற்றும் இடைக்கால குழு நியமனம் தொடர்பில் ஆராய்வதற்காகவே அமைச்சின் செயலாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## வளாகத்தில் பதற்றம்

இலங்கை கிரிக்கெட் சபைக்கு எதிரான ஆர்பாட்டம் வலுப்பெற்றதை அடுத்து இலங்கை கிரிக்கெட் சபைக்கு முன்னிலையில் பெருமளவிலான பொலிஸார் திங்கட்கிழமை (06) குவிக்கப்பட்டிருந்தனர்.

இதற்கிடையில், இலங்கை கிரிக்கெட் வளாகத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டம் நடத்திய குழுவொன்று இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவரிடம் கடிதம் ஒன்றை கையளித்தது.

## எழுவர் அடங்கிய குழு நியமனம்

Sri Lanka Cricket

1996 உலகக் கிண்ணத்தை வென்ற அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் இடைக்காலக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் 1973ஆம் ஆண்டு 25ஆம் இலக்க விளையாட்டு சட்டத்தின் ஊடாக அவருக்கு

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சிறுவர்களுக்கு மாரடைப்பு அபாயம்

சர்வதேச சுகாதார விஞ்ஞானப் பிரிவின் போசாக்கு அலகு பிரதானி வைத்தியர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அநேகமான மாணவ மாணவியர் சந்தையில் விற்பனை செய்யப்படும் முறுக்கு, வடை, ரோல்ஸ், பெட்டிஸ், டோனட், கேக் உள்ளிட்ட உணவு வகைகளை உட்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீனி, எண்ணெய் போன்றன அதிகளவில் செறிவான உணவுப் பொருட்களை உட்கொள்வதனால் சிறு வயதிலேயே பாரிய ஆபத்துகளை எதிர்நோக்க நேரிடுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

குறைந்த வயதிலேயே சிலருக்கு மாரடைப்பு, நீரிழிவு நோய்கள் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். பிள்ளைகள் எண்ணெய் மற்றும் சீனி செறிந்த உணவுகளை வகைகளைத் தவிர்க்க வேண்டும் எனவும், உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## தங்க எம்.பி தராசில் இருந்து நீக்கம்

எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

அலிசப்ரி ரஹீம் மீது கட்சியின் ஒழுக்கற்று குழு நடத்திய தொடர்ச்சியான விசாரணையின் பின்னரே, கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அவரை நீக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கும் முஸ்லிம் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட தேர்தல் உடன்படிக்கையின் பிரகாரம், தராசுச் சின்னத்தில் அலிசப்ரி ரஹீம் போட்டியிட்டார்.

இதற்கிணங்க, இவரது பதவி நீக்கம் குறித்த கடிதம் அலிசப்ரி ரஹீமுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதி, முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடிதத்தைப் பொறுப்பேற்றுள்ள முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நயீமுல்லா, இது குறித்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்துள்ளதாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தவிசாளர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி மேலும் தெரிவித்துள்ளார்.

## மஞ்சள் காஸில் மாற்றமில்லை

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிப்புடன் ஒப்பிடும் போது நாட்டில் எரிவாயு விலை அதிகரிக்கப்பட வேண்டியிருந்தாலும், தற்போதைய விலைக்கே சமையல் எரிவாயுவை விற்பனை செய்ய லாஃப்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளதாக நிறுவனத்தின் நிறைவேற்று குழு அதிகாரி கலாநிதி நிரோஷன் ஜே பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரை 3,985 ரூபாய்க்கும், 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரை 1,595 ரூபாய்க்கும் கொள்வனவு செய்ய முடியும் என்றும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

# இரண்டு புத்தர் சிலைகள் வைப்பு

குறித்த பகுதியில் ஆரம்பத்தில் புத்த விகாரை கட்டுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில் அதற்கு அப்பகுதி மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், குறித்த விடயம் தொடர்பாகக் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் மற்றும் பொதுமக்கள் முறையிட்டதையடுத்து, ஆளுநரினால் குறித்த கட்டுமானங்களுக்கு தடையுத்தரவு கடந்த ஓகஸ்ட் மாதம் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் தடையுத்தரவையும் மீறி குறித்த பகுதியில் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், அதற்கு எதிராகப் பொதுமக்கள் 03.09.2023 அன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இதன் பின்னர் 09.09.2023 அன்று குறித்த பகுதியில் பொரலுகந்த ரஜமஹா விகாரை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டு தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் எவ்வித அனுமதி இல்லாத நிலையிலும் கட்டுமானப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

திங்கட்கிழமை (06) காலை குறித்த பகுதியில் இரண்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

பௌத்த மக்களே இல்லாத, தமிழ் மக்கள் காலாகாலமாக வாழ்ந்து வருகின்ற இப்பகுதியில் இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும், இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் முகமாகவும் சிலர் திட்டமிட்டுச் செயற்பட்டு வருவதாகவும், புத்த விகாரையின் கட்டுமானங்களைத் தொடர்ந்து இப்பகுதிகளைச்சூழச் சிங்கள மக்களைக் குடியேற்றும் திட்டம் உள்ளதாகவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

## அரவம் தீண்டியதில் புது மணமகன் மரணம்

(5) இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாரதிபுரம் ஐயங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த மார்ட்டின் சில்வா காசுதன் என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார். (24) வயதுடைய இவர், அண்மையில் திருமணமானவர் என அறியமுடிகின்றது.

தனது தொழிலின் நிமித்தம் பண்ணை உரிமையாளர் ஒருவருக்கு அவரின் மாடுகளை பராமரிப்பதற்காக புளுட்டுமானோடை பகுதியில் இங்குள்ள வாடியில் உறங்கிக்கொண்டிருக்கும்போது, வாந்தி மற்றும் மயக்கமடைந்த நிலையில், அருகில் உள்ளவர்களின் உதவியுடன் கரடியனாறு வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெற்று வந்தார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைவாக அமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர், சடலத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## "ரணிலின் தந்திரோபாயம் தமிழர்களை பலவீனப்படுத்தும்"

"ஜனாதிபதி ரணில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்பர் என அவர் சார்ந்த வட்டாரங்கள் புகழாரம் சூடினாலும் புள்ளிவிபர ரீதியாக மாற்றம் எதுவும் நிகழவில்லை. மாறாக நாட்டின் கடன் அதிகரித்த வண்ணமே உள்ளது" என்றார்.

ஜனாதிபதியின் ஒவ்வொரு தீர்மானங்களும் தமிழர்கள் சார்ந்த பிரச்சினைகளைத் திசை திருப்புவதாகவும் அதற்கான தீர்வுகளைப் பலவீனப்படுத்துவதாகவும் அமைந்து வருகின்றது.

ரணிலின் எதேச்சதிகார போக்கை இராஜதந்திர ரீதியாக சமநிலைப்படுத்த தமிழர் தரப்பில் ஆளுமையான துணிச்சலான தலைமை தமிழ் கட்சிகளில் இல்லை என்பது வேதனையான விடயம் என்றார்.

அத்துடன் தமிழ் புத்திஜீவிகள் தரப்பில் பலமான குரல் இல்லை. புலம்பெயர் தரப்பிலும் வறிதாகவே உள்ளது. இதனால் ஜனாதிபதி ரணில் எல்லையின்றி தமிழர்களின் அபிலாசைகளைக் கபளீகரம் செய்யத் துணிந்துள்ளார் என்றும் குகதாஸ் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன் தன்னை சிங்கள பௌத்த மக்களின் தலைவனாகக் காட்டவே முயற்சிக்கின்றார். அண்மையில் ஜேர்மன் ஊடகத்திற்குக் கொடுத்த நேர்காணல் இதனை மிகத் தெளிவாக வெளிப்படுத்தி இருக்கிறது.

தமிழர் தரப்பு பழைய பல்லவிப் போராட்டங்களை அறிவிப்பதும் அதன் மூலம் தமிழ் கட்சித் தலைமைகள் தங்கள் இயலாமையை வெளிப்படுத்துவதும் பலவீனப்பட்டு விரக்தி நிலையில் உள்ள மக்களின் வெறுப்பை அதிகரிப்பவர்களாகவும் மாறி உள்ளனர் இது தமிழ்த் தேசிய இருப்புக்கு சாதகமில்லை மிக ஆபத்தானது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்குப் பதிலாக அதைவிட மேலும் மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவர ஜனாதிபதி முயற்சிக்கின்றார்

எல்லை தாண்டி சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் தென்னிந்திய மீனவர்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக போராடும் வடக்கு மீனவர்களுக்குத் தீர்வு காணப்படாமல் தென்னிந்திய மீனவர்கள் வடக்கு கடலில் மீன் பிடியில் ஈடுபட ரணில் அரசாங்கம் அனுமதி வழங்க இருப்பதாகக் கூறும் அறிவிப்பு மேலும் வடக்கு மீனவர்களை நெருக்கடிக்குத் தள்ளும் ஏற்கெனவே இருந்த பிரச்சினைக்குத் தீர்வு இல்லாமல் இரட்டி மடங்காக்கும்.

தமிழர் தரப்பு மக்கள் ஆணையில் இருந்து ஒரு படி கீழிறங்கி சமஷ்டி தீர்வுக்கு முன்பாக அரசியல் அமைப்பில் உள்ள பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு ஜனாதிபதி ரணிலிடம் கோரினர்.

இதனை எதிர்பாக்காத ரணில் அதற்கும் ஒரு ஆப்பு வைத்தார். பொலிஸ் அதிகாரம் தரமுடியாது என கூறினார். உண்மையில் அரசியல் அமைப்பில் உள்ள அதிகாரத்தைப் பாராளுமன்ற முடிவு இல்லாமல் நினைத்தவுடன் ஜனாதிபதி தரமாட்டேன் என கூற முடியாது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க சர்வாதிகாரி போல செயற்பட்டுள்ளார் என்றார்.

## சபையின் கௌரவத்துக்கு பங்கம் விளைவித்துள்ளனர்

பாராளுமன்றத்தில் கௌரவத்துக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டுள்ளனர் என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையிலான குழு தெரிவித்துள்ளது.

குழுவின் அறிவித்தலின் பிரகாரம், இராஜாங்க அமைச்சர் மற்றும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் விசாரணை குழுமுன் திங்கட்கிழமை (6) ஆஜராகியிருந்தனர். சம்பவம் தொடர்பான சி.சி.டி.வி. காட்சிகளைப் பார்த்த பின்னர் இருவரின் சாட்சியமும் பதிவு செய்யப்பட்டது.

சம்பவத்தை நேரில் பார்த்த இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்தவும் குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்த போதிலும், அத்தியாவசிய வேலைகள் காரணமாக அவர் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவிருக்கும் அடுத்த குழுக் கூட்டத்திற்கு பியால் நிஷாந்த அழைக்கப்பட உள்ளார்.

இந்தக் குழு இறுதியாக எதிர்வரும் 9ஆம் திகதி காலை 10.30 மணிக்குக் கூடுகிறது. அன்றைய தினம் விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னர் சம்பவம் தொடர்பான அறிக்கை சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்ற வளாகத்தில், ஒக்டோபர் 20ஆம் திகதியன்று பெரும் ரகளை இடம்பெற்றது. இதுதொடர்பிலான வீடியோ வைரலாகியிருந்தது.

பாராளுமன்ற வளாகத்தில் ஒருவருக்கு ஒருவர், ஏசிக்கொள்வது, தள்ளுமுள்ளுகள், மோதலை வீடியோ பதிவு செய்தல் போன்ற பல விடயங்கள் தொடர்பில் குழு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்ற பிரதி சபாநாயகர் அலுவலக கேட்போர் கூடத்தில் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன, பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மார்க்கர், கயந்த கருணாதிலக, பதில் செயலாளர் ஆகியோர் முன்னிலையில் விசாரணைகள் நடத்தப்பட்டன.

## "சீன கடல் உணவுகளை இறக்குமதி செய்யோம்"

சீன தூதுவர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்து நெடுந்தீவு பிரதேச மக்களுக்காக 500 உலருணவுப் பொதிகளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை (06) கையளித்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில், பொருளாதார நெருக்கடியின் போது இலங்கையுடன் பொருளாதாரத்தை உயர்த்த முதலாவதாக சீனாவே கை கொடுத்தது. சீன எதிர்காலத்திலும் கை கைகொடுக்கும் என்றார்.

15 மில்லியன் ரூபாய் பெறுமதியான உதவிகளை சீனா வழங்கவுள்ளது. 5 மில்லியன் உணவுப் பொருட்களாகவும் 5 மில்லியன் மீனவர்களுக்காகவும் 5 மில்லியன் வீட்டு திட்டத்திற்கும் வழங்கவுள்ளது என்றார்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சீனா சென்றபோது, இலங்கை கடலுணவை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டது. சீனாவில் இருந்து இலங்கைக்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது. விசேடமாக வடக்கு மாகாணத்திற்கு கடலுணவு இறக்குமதி செய்யப்படாது என்றும் அவர் சொன்னார்.

சீனா உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார நாடு. மிகப்பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது. உங்களை அதற்கே வரவேற்கிறோம்.

சீன தொழிற்துறையினர் முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிட ஆர்வமாக உள்ளனர். வடக்கு மக்களும் அதனை வரவேற்க தயாராகவுள்ளனர் என்று நம்புகிறேன் என்றார்.

## வடக்கில் முதலிட சீனா கடும் ஆர்வம்

சீன தூதுவர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்து நெடுந்தீவு பிரதேச மக்களுக்காக 500 உலருணவுப் பொதிகளை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை (06) கையளித்தனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் நான் வடக்கு மாகாணத்திற்கு வந்துள்ளேன். சீன பௌத்த மக்களால் 5,000 உணவு பொதிகளை வடக்கு மாகாண மக்களுக்கு வழங்க வந்துள்ளேன்.

கடந்த முறை வடக்கில் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்கினோம். உணவுப் பொதி நெருக்கடி நிலையில் உதவியாக இருக்கும். உணவு பொதி 7000 ரூபாய் பெறுமதியானது.

உங்களுக்கும் எங்களுக்கும் உள்ள உறவின் அடிப்படையில் உதவிகளை வழங்குவோம். எதிர்காலத்திலும் சீன கைகொடுக்கும் என்றார்.

## 54 வகையான மருந்துகள் அடுத்தவாரம் வரும்

அத்துடன், 58 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்து பொருட்களும் கிடைக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக எதிர்வரும் நாட்களில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உதவிகள், பங்களாதேஷ் சுகாதார அமைச்சின் ஊடாக நாட்டிற்கு கிடைக்கவுள்ளது.

இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் மற்றும் சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், இலங்கை அரசுக்கும் பங்களாதேஷ் அரசுக்கும் இடையில் மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# கொழும்பு கிரிக்கெட்டில் கடும் சர்ச்சை

## "தனக்கு எதுவும் தெரியாது"

இடைக்கால கிரிக்கெட் குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் அனுமதி வழங்கவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

திங்கட்கிழமை (06) மாலை நடைபெற்ற அமைச்சர்கள் கூட்டத்தில் இடைக்கால குழு நியமனம் தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கேட்க அமைச்சர்கள் பலர் தயாராகி வருவதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுவாக கிரிக்கெட் போன்ற நிறுவனங்களுக்கு இடைக்கால குழு நியமிக்கப்படும் போது ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும் எனவும் ஆனால் விளையாட்டுத்துறை அமைச்சர் அது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவிக்கவில்லை எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "மாற்றுவேன்"

நாட்டின் மீது பற்றுள்ள வீரர்கள் குழுவை உருவாக்குவதே எனது நோக்கம் என குறிப்பிட்டுள்ள அவர், தனது நிலைப்பாடு பலவந்தமாக எடுக்கப்பட்ட ஒன்றல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் நீண்டகாலமாக இது குறித்து சிந்தித்து வந்துள்ளார். இலங்கை கிரிக்கெட்டின் தற்போதைய நிலையை அடிப்படையாக வைத்தே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார். இலங்கை மக்கள் கிரிக்கெட் குறித்து களைப்படைந்துவிட்டார்கள் அதிக ஊழல் காணப்படும் நிறுவனமாக இது மாறியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## எழுவர் அடங்கிய குழு நியமனம்

வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் ஏழு பேர் கொண்ட இடைக்கால குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்கால குழு, நேற்று (06) முதல் செயல்படும்.

மேலும், ஷம்மி சில்வா தலைமையிலான இலங்கை கிரிக்கெட் வாரியம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக விளையாட்டுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அர்ஜுன ரணதுங்கவுக்கு மேலதிகமாக, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.ஐ.இமாம், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ரோஹினி மாரசிங்க, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஐராங்கனி பெரேரா, உபாலி தர்மதாச, ரகித ராஜபக்ஷ மற்றும் ஹிஷாம் ஜமால்டீன் ஆகியோர் இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்கால குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



# சீனத் தூதுவரின் சந்தேகம்

நிதர்ஷன் வினோத், எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாண பழைய கச்சேரி கட்டட தொகுதியைத் திங்கட்கிழமை (06) பார்வையிட்டுள்ளனர்.

இலங்கைக்கான சீன தூதுவர் கி ஸென் ஹொங் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு விஜயம் செய்து பல்வேறு சந்திப்புகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேவேளை, யாழ்ப்பாணம் பழைய கச்சேரியைச் சீன நாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கடந்த காலங்களில் குற்றச்சாட்டு எழுந்த நிலையில், சீனதூதுவர் குறித்த கட்டட தொகுதியைப் பார்வையிட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

புலமைபரிசில் பரீட்சையை

# எழுதவிடாது தடுத்த நிர்வாகம்



செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, கோம்பாவில் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 5இல் கல்விகற்று வந்த பாடசாலை மாணவன் ஒருவன், சுகயீனமுற்று இரண்டு மாதங்கள் பாடசாலை செல்லவில்லை என்ற காரணத்தினால் அந்த மாணவனை தரம் 5 புலமை பரிசில் பரீட்சை எழுதவிடாது பாடசாலை சமூகம் தடுத்துள்ளது.

புதுக்குடியிருப்பு, கோம்பாவில் கிராமத்தில் கூலி வேலை செய்து தங்கள் குடும்பத்தினை கொண்டு செல்லும் குடும்பத்தின் இரண்டாவது பிள்ளையான தரம் 5 இல் கல்விகற்ற மாணவனுக்கு இந்த அவல நிலை ஏற்பட்டுள்ளது. அவனது சகோதரி தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து கல்விக் கற்று வருகின்றார்.

குறித்த மாணவனைப் புலமை பரிசில் பரீட்சைக்காகப் பெற்றோர்கள் தயார் படுத்தியுள்ளார்கள். இதன்போது குறித்த மாணவனுக்கு வயிற்றில் ஏற்பட்ட உபாதை காரணமாக வயிற்றுப் பகுதியில் பாரிய சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் குறித்த மாணவன் இரண்டு மாத காலமாக பாடசாலை செல்லவில்லை. அதற்கான மருத்துவ அறிக்கையினையும் பெற்றோர்கள் காட்டியுள்ளார்கள்.

இந்த நிலையில், புலமை பரிசில் பரீட்சைக்கான நாள் கடந்த 15.10.2023 அன்று நெருக்கி வந்தவேளை, பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் பெற்றோரை அழைத்துக் குறித்த மாணவனைப் பரீட்சை எழுத அனுமதிக்கமுடியாது என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாடசாலை அதிபரிடமும் பெற்றோர்கள் முறையிட்ட போது, மாணவன் 70 புள்ளிகளுக்கு கீழ்த்தான் பரீட்சைகளில் புள்ளி எடுக்கின்றார். இது போதாது, புலமை பரிசில் பரீட்சை முக்கியமில்லை, அதனால் பிரச்சினை இல்லை, பிறகு படிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், பாடசாலை நிர்வாகம் பெற்றோரிடம் கடிதம் ஒன்றினை எழுதி கையெழுத்தும் வாக்கியுள்ளது.

பாடசாலை நிர்வாகம் தங்கள் பரீட்சை சித்தி வீததத்தை சிறப்பாகக் காட்டவேண்டும் என்பதற்காக ஒரு மாணவனைப் பரீட்சை எழுதவிடாமல் தடுத்துள்ளமை பெரும் அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், மாணவன் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளார்.



# நீதவான் அவமதித்ததால் நீதிமன்றம் இடைநிறுத்தம்

நுவரெலியா நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள், நீதவானின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்றத்தை விட்டு வெளியேறியதையடுத்து நீதிமன்ற நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் நுவரெலியா நீதிவான் நீதிமன்றில் திங்கட்கிழமை (06) வழக்குகளில் ஆஜராகாமல் இருந்தமையால் நீதவான் நீதிமன்ற நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள், திறந்த நீதிமன்றில் சந்தேக நபர்கள் முன்னிலையில் நீதவான், பொலிஸ் உத்தியோகத்தர்களை பல மாதங்களாக, அவமதித்து வருவதாகக் கூறுகின்றனர்.

இது குறித்து நுவரெலியா பிரதான பொலிஸ் அத்தியட்சகருக்கு முதலில் அறிவித்ததாகவும், அதற்குத் தீர்வு கிடைக்காததால் நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், (06) முற்பகல் 11.30 மணியளவில் நீதிமன்ற நடவடிக்கைகளை விட்டு வெளியேறியதாகவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

டயகம, அக்கரபத்தன, தலவாக்கலை, லிந்துல, நானுஓயா, பட்டிபொல, கந்தபொல பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை விட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, சம்பவம் தொடர்பில் நீதவானைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவித்தார்.

# விடுதியில் இருந்து சடலம் மீட்பு



எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் இன்று திங்கட்கிழமை (06) மீட்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையைச் சேர்ந்த லால் பெரேரா (வயது 61) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 3 நாட்களாக விடுதியில் ஒன்றில் தங்கி குறித்த நபர், திங்கட்கிழமை (06) காலை உயிரிழந்த நிலையில், சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் விடுதி உரிமையாளர் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், சடலத்தை மீட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளது.

சடலம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மதுவில் மிதந்த மாதுகள் தாக்கியதில் பி.சிக்கு காயம்

கிரிகோரி வீதிக்கு அருகில் ஞாயிற்றுக்கிழமை (05) நள்ளிரவு 12.00 மணியளவில் காரை நிறுத்தி மது அருந்திக்கொண்டிருந்ததாகக் கூறப்படும் இரு பெண்களால் தாக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குருந்துவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்கள் இருவரும் அதிக போதை காரணமாக பொலிஸ் கான்ஸ்டபிளை தாக்கியுள்ளதாகவும் சந்தேகத்தின் பேரில் இருவரும் கைது செய்யப்பட்டதாகவும் அப்பகுதியின் உயர் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கொழும்பு 13 மற்றும் கொழும்பு 14 ஆகிய இடங்களில் வசிக்கும் 30 மற்றும் 43 வயதுடைய இரண்டு பெண்களே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகர போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றும் இந்த பொலிஸ் கான்ஸ்டபிள், மேலும் பல பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் மதுபோதையில் வாகனம் ஓட்டுபவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு மீண்டும் பொலிஸ் நிலையத்திற்கு வந்து கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# பாரிய விபத்தால் இருவர் காயம்

தீஷான் அஹமட்

மூதூர் – நீலாப்பொல சந்தியில் வைத்து முச்சக்கர வண்டியுடன் அரச கெப் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ள சம்பவம் ஒன்று திங்கட்கிழமை (06) பதிவாகியுள்ளது.

இச்சம்பவத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த தெஹிவத்தை பகுதியைச் சேர்ந்த பெண் மற்றும் ஆண் ஒருவர் படுகாயமடைந்து கிளிவெட்டி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# 2 வயது சிறுவன் ‘சோழன்’ சாதனை

எஸ்.சதீஸ்

பலாங்கொடையில் வசித்து வரும் ராஜீவ்காந்தி - ரொஷானி தம்பதிகளின் மகனான ஆரோன் சாத்விக் என்ற 2 வயது 11 மாதங்கள் ஆன சிறுவன் 100 மீட்டர் தூரத்தை 30 நொடிகளில் ஓடி முடித்து “சோழன்” உலக சாதனை படைத்துள்ளார்.

பலாங்கொடை பெரிய மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் நடுவர்களாக சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாகவாணி ராஜா, இரத்தினபுரி மாவட்டத் தலைவர் பிரவீனா பாரதி மற்றும் நுவரெலியா மாவட்டத் தலைவர் சாம்பசிவம் சதீஷ்குமார் போன்றோர் நிகழ்வைக் கண்காணித்து உறுதி செய்துள்ளனர்.

சோழன் உலக சாதனை படைத்த சிறுவனுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்ட அதேவேளை, அங்கிருந்த அனைவரும் அவரை வாழ்த்திப் பாராட்டியுள்ளனர்.

# “கால்நடைகள் திருட்டு தொடர்கிறது”



மு.தமிழ்ச்செல்வன்கி

கிளிநொச்சி-கனகபுரம் 10ஆம் மற்றும் 10 பண்ணை பகுதிகளில் தொடர்ச்சியாக கால்நடைகள் திருடப்பட்டு வருவதோடு, களவுகளும் இடம்பெற்று வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

வாழ்வாதாரத்திற்காக வளர்க்கப்பட்டு வருகின்ற கால்நடைகள் திருடப்பட்டு பராமரிப்பு இன்றி காணப்படுகின்ற காணிகளுக்குள் வெட்டப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், பகல் வேளைகளில் வீடு புகுந்து கத்தி முனையில் பணம், நகைகள் என்பனவும் கொள்ளையிட்டு சென்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் இதனால் இரவு வேளைகளில் மட்டுமின்றி பகலிலும் வீடுகளில் தனியாக இருப்பது அச்சத்தை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ள போதும், எந்தவித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

# மணல் விட்டோடிகளை தேடி வேட்டை



பு.கஜிந்தன்

டிப்பரில் மணலை கடத்தி செல்லும்போது பொலிஸாரை கண்ட மணல் கடத்தல்காரர்கள், வீதியிலேயே மணலை கொட்டி விட்டு சென்றதால் வீதியோரமாக இருந்த தொலைத்தொடர்பு கம்பங்கள் சேதமடைந்ததுடன், போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியின் சிறுப்பிட்டி பகுதியில் திங்கட்கிழமை (06) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

யாழ். அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் டிப்பரில் மணல் கடத்தப்பட்டபோது பொலிஸார் வாகனத்தை மறித்துள்ளனர். இதனையடுத்து, டிப்பரில் மணலை கடத்தியவர்கள் தப்பித்தோடியதுடன், வீதியிலேயே மணலை கொட்டி விட்டுச் சென்றுள்ளனர்.

இதன் காரணமாக வீதியோரமாக இருந்த தொலைத்தொடர்பு கம்பங்கள் சேதமடைந்ததுடன், போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸாரால் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நிபுணர்களின் வெளியேற்றத்துக்கு தயாராக வேண்டியதன் முக்கியத்துவம்

சட்ட ரீதியாகவும், சட்ட விரோதமாகவும் பல இலங்கையர் நாட்டை விட்டு வெளியேறுவது அதிகரித்த வண்ணமுள்ளது. போதியளவு உணவு, பணம் மற்றும் தொழில் வாய்ப்புகள் இன்மை காரணங்களால் இந்த நிலை தோன்றியுள்ளது. இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு படகுகளின் மூலம் செல்ல முயல்வோரும் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக பாதிக்கப்பட்ட இலங்கையர்கள், தமது பொருளாதார சுதந்திரத்துக்கு முக்கியத்துவமளித்து இவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்கின்றனர்.

நடப்பு ஆண்டின் ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் பெருமளவான இலங்கையர்கள் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது. மத்திய கிழக்கில் நாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளுக்காக செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பணியகம் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

உயர் எழுத்தறிவு வீதம் மற்றும் சிறந்த இலவச கல்விக் கட்டமைப்பைக் கொண்ட இலங்கையிலிருந்து இவ்வாறு பலர் வெளிநாட்டுக்கு செல்வது, குறிப்பாக நிபுணர்கள் புலம் பெயர்வது என்பது நாட்டின் வளத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகின்றது.

மேலும், கனடா போன்ற நாடுகளில் விசேடத்துவமான தொழிற்துறைகளில் உயர் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றமை பல தேசிய வைத்தியசாலைகளைச் சேர்ந்த தாதியர்கள் மற்றும் வியாபாரங்களைச் சேர்ந்த கணக்காளர்களுக்கு கவர்ச்சிகரமான தெரிவாக அமைந்துள்ளன.

வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் போன்றோர் வைத்தியசாலைகளில் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். குறிப்பாக மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டுடன், அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவில் மேற்கொள்ளப்படும் வரி அறவீடுகள் போன்றவற்றால் விரக்தியுடன் காணப்படுகின்றனர். புதிதாக கோரப்படும் கடவுச்சீட்டுக்களுக்கான கேள்வியும் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 250 சதவீத்தால் அதிகரித்துள்ளது.

தகவல் தொழில்நுட்பம், கணனித் துறையைச் சேர்ந்தவர்களும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வருகின்றனர். 2017இல் 120,000க்கும் அதிகமான ஊழியர்களுடன், 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெற்ற இலங்கை, கணனி மென்பொருள் வெளிக்கள சேவை வழங்கும் நாடுகளின் தரவரிசையில் முதல் 30 நாடுகளுக்குள் ஒன்றாக திகழ்ந்த நிலையில், தற்போது நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. இலங்கையில் திறமைசாலிகளை தக்க வைத்துக் கொள்வதற்காக இலங்கையின் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சம்பளக் கொடுப்பனவுகளை அமெரிக்க டொலர்களில் வழங்கவும் முன்வந்துள்ளன. அதனால் பெரிதும் பயன் கிடைத்தாக தெரியவில்லை.

இவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்லும் திறமைசாலிகளை தக்க வைத்துக் கொள்ள வேண்டியது, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் மீள்கட்டியெழுப்பல் செயற்பாடுகளுக்கு இன்றியமையாத தேவையாகும். அவர்களை தடுக்க முடியாவிடினும், அடுத்த தலைமுறை இளைஞர்களுக்கு அந்தப் பதவிகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டியது முக்கியமானதாகும்.




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நினைவு அடுக்குகளில் பதிவுகள் பெருகிய வண்ணம் இருக்கின்றனவே தவிர, அவை நிகழ்ந்த பதிவுகளை அழிக்க முடியாமல் திணறுகின்றன.

இளமைக்கால சேட்டைகள், குறும்புகள், பாசக்கார நண்பர்களுடன் ஊர் சுற்றுவது, கோவில் திருவிழாக்கள், நாடகங்கள், கூத்துகள் என சென்று விடியவிடியக் கண்விழித்துப் பார்த்தல் என ஏராளமான நினைவுகள், நினைவு அடுக்குகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

அந்தக் காலத்தல், பாடசாலைக்கு வராமல் ஒளிந்து கொண்டிருக்கும் மாணவர்களை, எங்கள் தலைமை ஆசிரியரான ஆறுமுகம் வாத்தியார், அவர்களின் வீடுகளுக்குக் கையில் பிரம்புடன் சென்று, பெற்றோரின் முன்னிலையிலேயே அடித்து, பாடசாலைக்கு அழைத்துக் கொண்டு செல்வார்.

இப்போது நினைத்தாலும் அந்ப் பசுமை மிகு எண்ணங்களில் இருந்து மீளமுடியாததுள்ளது. இளமைக்கால அனுபவங்களும் நினைவுகளும் முதுமையிலும் ஸ்பரிஸிக்கும் கோவில் திருவிழாக்கள், நாடகங்கள், கூத்துகள்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன

## கடிதங்கள்

### பொலிஸாரின் வேண்டுகோள்

சம்மாந்துறையில் அதிகரித்து வரும் திருட்டு சம்பவங்கள் தொடர்பாக பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு சம்மாந்துறை பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இப்பிரதேசத்தில், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாடுகள் அதிகமாகத் திருடப்படுவதாகவும் இவ்வாறு திருடப்படும் மாடுகள் அறுக்கப்பட்டு பங்கு இறைச்சியாக விற்பனை செய்யப்படுவதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, பொதுமக்கள் தங்களுக்கான இறைச்சியைக் கடைகளில் பெற்றுக் கொள்வதே சிறந்தது என தெரிவித்துள்ளனர். மேலும், இது சம்பந்தமாக அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாகவும் மாடுகளை வைத்திருப்போர் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அத்துடன், அதிகமானவர்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும்போது, அயல்வீட்டில் கூறி விட்டு வெளியே செல்கின்றனர். சில நேரங்களில் அதை முகநூலிலும் பதிவிடுகின்றனர். அதை இனங்கண்டு திருடர், திருட்டில் ஈடுபடுவதாகவும் தெரிவித்துள்ளனர். இந்த வருடம் மாத்திரம் 03 மோட்டார் வாகனங்கள் திருடப்பட்டுள்ளதாகவும் அவற்றை பொலிஸார் மீட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். எனவே, இரவு நேரத்தில் உங்களுடைய பிரதேசங்களில் சந்தேகத்திற்கு இடமாக யாரும் நடமாடினால் உடனடியாக சம்மாந்துறை பொலிஸாரிடம் அறிவிக்குமாறும் கேட்டு கொண்டுள்ளனர்.

- சிஹான் பாரூக்

## உலக மக்கள் ஆதரவை சாதுர்யமாக கையாள வேண்டிய முஸ்லிம்கள்

மொஹமட் பாதுஷா

உலகம் மிகப் பெரும் மனிதப் பேரவலத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றது. 75 வருட சரித்திரத்திரத்தைக் கொண்ட ஒரு திறந்தவெளிச் சிறையில் போர்க் குற்றங்கள், இன அழிப்பு, இனப்படுகொலை, மனித உரிமை மீறல், மனிதாபிமான மறுப்பு, தடைசெய்யப்பட்ட ஆயதங்களின் பயன்பாடு என எல்லா வகையான குற்றங்களும் ஒருசேர நடந்து கொண்டிருக்கின்றன என்றால் அது பலஸ்தீனத்தில் மட்டும்தான்.

இஸ்ரேலுக்கு சார்பாக இன்னும் அமெரிக்கா, கனடா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட விரல்விட்டு எண்ணக் கூடிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை துணை நிற்கின்றன. இதன்மூலம், உலகுக்கு நீதியையும் மனித உரிமையையும் புகட்டி, தங்களை 'நீதியின் காவலர்களாக' வெளிக்காட்டி வந்த மேற்குலகின் முகத்திரை கிழிந்து தொங்குகின்றது.

மறுபுறத்தில், ஹமாஸ் அமைப்புக்கு சில அரபு நாடுகள் உள்ளடங்கலாக பல நாடுகள் தார்மீக ஒத்துழைப்பை வழங்க முன்வந்திருக்கின்றன. ஹஸ்புல்லா போன்ற பிராந்தியத்திலுள்ள ஏனைய ஆயுத இயக்கங்களும் இப்போது பலஸ்தீன நில மீட்புப் போரில் இணைந்து வருகின்றன. பிராந்திய யுத்தமொன்று எந்த நேரத்தில் உருவாகும் நிலையுள்ளது.

இதற்கிடையில், இஸ்ரேலுக்கு ஆதரவளிக்கும் நாடுகளில் உள்ள முக்கால்வாசி மக்கள் உட்பட உலகெங்குமுள்ள கிட்டத்தட்ட 90 சதவீதமான சாதாரண மக்கள் பலஸ்தீனத்தில் சிக்குண்டுள்ள 2.2 மில்லியன் மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். அவர்களுக்காக அழுகின்றனர், பேசுகின்றனர். அங்கு போர்நிறுத்தம் வேண்டுமென்று கோருகின்றனர்.

பலஸ்தீனத்திற்காக அரபு நாடுகள் குரல் கொடுப்பதும் ஏனைய நாடுகளில் வாழ்கின்ற முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் செய்வதும் ஆச்சரியமான விடயமல்ல. ஏனெனில், பலஸ்தீனம் என்பது பல ஆயிரக்கணக்கான இறைத்தூதர்களில் காலடி பதிந்த இடம். அல்-அக்ஸா பள்ளிவாசல் என்பது முஸ்லிம்களின் ஒரு புனிதத் தலம். எனவே, இதனை பாதுகாக்க வேண்டியது உலகெங்குமுள்ள முஸ்லிம்களின் கடமையாகும்.

ஆனால், உலகின் கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் வாழும் இஸ்லாத்தைப் பின்பற்றாத மக்கள் பலஸ்தீனர்களுக்கு நீதி வேண்டி அவர்களுக்கு ஆதரவாக போராடுகின்றார்கள் என்பதுதான் இங்கு கவனிப்பிற்குரியதும் முக்கியமான மாற்றமும் ஆகும்.

கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர்கள், இந்துக்கள், பௌத்தர்கள் மட்டுமன்றி யாரின் பெயரைச் சொல்லி யுத்தம் நடத்தப்படுகின்றதோ அந்த யூத மக்களே இன்று பலஸ்தீனர்கள் மீதான படுகொலையையும் போர்க்குற்றத்தையும் கண்டித்து பகிரங்கமாக குரல் கொடுக்கின்றனர். வரலாறு காணாத போராட்டங்களை நடத்துகின்றனர். மேற்குலகம் அதிர்கின்றது.

சமகாலத்தில், இஸ்ரேலுக்கு முட்டுக்கொடுக்கின்ற மேற்குலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள பாராளுமன்றங்களில் உள்ள எம்.பிக்கள் பலஸ்தீனத்தில் நடந்து கொண்டிருக்கின்ற இஸ்ரேலில் ஆக்கிரமிப்பு, இன அழிப்பு, போர்க்குற்றத்திற்கு எதிராக தொடர்ச்சியாக குரல் கொடுப்பதையும் காண முடிகின்றது.

உண்மையாகச் சொன்னால், முஸ்லிம் நாடுகள், அரபு நாடுகளில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் ஏனைய இடங்களைச் சேர்ந்த முஸ்லிம் செயற்பாட்டாளர்களை விட முஸ்லிம் அல்லாத சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான் இன்று பலஸ்தீனத்திற்காக அதிகம் நெஞ்சை நிமிர்த்திப் பேசுகின்றனர்.

'யார் என்றாலும் நியாயத்தைப் பேசுதல்' என்ற விடயத்தில் அரபு நாடுகளும், பொதுவாக முஸ்லிம்களுக்கும் இதனை ஒரு முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று பலஸ்தீனத்திற்காக உலகமே குரல் கொடுக்கின்றது என்பது முக்கியமாக இரண்டு விடயங்களை வெளிப்படுத்துகின்றது. ஒன்று, அகன்ற பலஸ்தீனத்தில் ஒவ்வொரு நொடியும் இஸ்ரேல் செய்துவரும் அழிச்சாட்டியத்தின் பாரதூர தன்மையை மறைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதைக் காட்டுகின்றது.

இரண்டாவது, மேற்குலக ஊடகங்கள் இதுவரை காலம் காட்டிவந்த பொய்யான பிம்பங்களை உடைத்துக் கொண்டு மனிதர்கள் என்ற வகையில் இயற்கையாகவே உள்ள உலக மக்களின் மனிதநேயம் இன மத வேறுபாடுகள், அரசாங்கங்களின் நிலைப்பாடுகள் எதனையும் பொருட்படுத்தாமல் பெருவாரியாக வெளிப்பட்டிருக்கின்றது. நாம் முன்னைய பத்திகளில் குறிப்பிட்டதைப் போலவே, இது ஒரு மிகப் பெரிய உலக மாற்றம் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த நூற்றாண்டில் இப்படியொரு மனிதப் பேரவலம் இடம்பெற்றதும் இல்லை. நீதியை நிலைநாட்ட வேண்டி உலக மக்கள் இந்தளவுக்கு இன, மத வேறுபாடுகளைக் கடந்து பகிரங்கமாகப் போராடியதும் இல்லை.

ஆகவே, முஸ்லிம் உலகம் இதனை மிகவும் சாதுர்யமாக கையாள வேண்டும். பலஸ்தீன விவகாரத்தை அரபுலகம் கடந்த 75 வருடங்களாகச் சரிவரக் கையாண்டிருந்தால் இன்று பலஸ்தீனர்களுக்கு இப்படியொரு நிலை ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லாமல் போயிருக்கும். அந்த அடிப்படையில் இனியாவது தமது கடந்தகால தவறுகளை அரபுலக ஆட்சியாளர்கள் திருத்திக் கொள்ள வேண்டும்.

அதேபோல், இன்னுமொரு விடயத்தையும் இங்கு கவனிக்க வேண்டியுள்ளது. அதாவது, முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற இலங்கை போன்ற நாடுகளில் இந்த விவகாரத்தை மிகவும் பக்குவமாகக் கையாள வேண்டும். அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவை யாரும் அறியாதவையும் அல்ல.

உலகின் ஒவ்வொரு பாகத்திலும் வாழ்கின்ற பிற இனங்கள், மதங்களைச் சேர்ந்த மக்கள்தான் இன்று கணிசமாக வீதிக்கு இறங்கி இஸ்ரேலுக்கு எதிராகப் பேரணிகளை நடத்துகின்றனர். இலங்கையில் கொழும்பிலும் வடக்கிலும் கூட இப்படியான நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

பிற சமூகங்களைச் சேர்ந்த பலர் சமூக வலைத்தளங்கள் வாயிலாக பலஸ்தீன மக்களுக்காகப் பேசுகின்றனர். இலங்கையிலும் பல யூதர்கள், யூத வழித்தோன்றல்கள் இருந்தாலும் இலங்கையர் பலர் இஸ்ரேலில் இருக்கின்றார்கள் என்றாலும், சிங்களவர்கள், கிறிஸ்தவர்கள், தமிழர்கள் பலஸதீனத்திற்காக குரல் கொடுக்கின்றனர். எனவே, இலங்கை முஸ்லிம்கள் மிகப் பக்குவமாக இந்த மாற்றத்தைக் கையாள வேண்டியுள்ளது.

இதேவேளை, இஸ்ரேலுக்கு சார்பாகவும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் ஓரிரு இனவாதிகள் கருத்துத் தெரிவிப்பதையும் காண முடிகின்றது. இதற்கு சில முஸ்லிம்கள் பதிலளித்த வீடியோக்களும் வெளியாகின்றன. பலஸ்தீன விவகாரத்தை மையமாகக் கொண்டு இலங்கையில் கருத்தியல் முரண்பாடு ஒன்று ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தை இது உண்டுபண்ணாமல் இல்லை.

இலங்கையில் உள்ள பெரும்பாலான இனவாதிகள் முட்டாள்கள். அவர்களுக்கு உலக அறிவு மிகக் குறைவு. ஒவ்வொரு சீசனுக்கும் குழப்பங்களை ஏற்படுத்த முனைவதைத் தவிர அவர்களுக்கு வேறு எதுவும் தெரியாது.

கொத்து ரொட்டிக்குள் கருத்தடை பதார்த்தத்தைக் கலந்து அல்லது கீழாடையில் பூசி கருத்தடையை ஏற்படுத்தலாம் என்றும் ஒரு முஸ்லிம் வைத்தியர் ஆயிரம் சிங்களப் பெண்களுக்கு கருத்தடை செய்யலாம் என்றும் சொன்னவர்கள் அவர்கள். அவர்களது முட்டாள்தனத்தை அளவிடுவதற்கு இதுவே போதுமானதாகும்.

எனவே, இவ்விடயத்தில் இனவாதிகளுக்கு முஸ்லிம்கள் விளக்கமளிக்கத் தேவையில்லை. அதனைச் சிங்கள சமூகத்தில் உள்ள முற்போக்காளர்கள், செயற்பாட்டாளர்களே மிகச் சிறப்பாக நுணுக்கமாகச் செய்வார்கள் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் அதனைச் சொல்வதும், சொல்லும் விதமும் வேண்டத்தகாத முரணையே ஏற்படுத்தும்.

பலஸ்தீனத்தில் அல்லல்படும் மக்களுக்காக இலங்கையில் இருந்து முஸ்லிம்கள் களத்திற்குச் செல்லப் போவதில்லை. ஆனால், அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். இலங்கை அரசு ஊடாக அழுத்தம் கொடுக்கும் நகர்வுகளைச் செய்ய வேண்டும் அதேபோல், கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தலாம். மனிதாபிமானமான உதவிகளைச் செய்யலாம். சமூக வலைத்தளங்கள் ஊடாக நேர்த்தியான தெளிவுபடுத்தல்களை முன்வைக்கலாம்.

இதுவெல்லாம் முஸ்லிம்களின் கடமையும் அடிப்படையும் உரிமையும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், இனவாத கருத்தாளர்களிடம் விவாதிக்கத் தேவையில்லை. அதேவேளை, இலங்கையில் வாழ்கின்ற ஒருசில மாற்று மதத்தவர்களுக்கு பலஸ்தீன யுத்தம் தொடர்பில் மாறுபட்ட பார்வை இருக்கவும் வாய்ப்புள்ளது. அவர்களுக்கு நியாயங்களை எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர முரண்பட வேண்டிய அவசியமில்லை. பலஸ்தீன விவகாரத்தில் முஸ்லிம் நாடுகள் எல்லாம் பெருமளவுக்கு ஒன்றுபட்டுள்ள போதிலும், நாம் எதிர்பார்ப்பது போல தீவிரமான, வேகமான நகர்வொன்றைச் செய்யவில்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இப்படியான சூழலில், சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் உள்ள முஸ்லிம்கள் மிகவும் பக்குவமாக நிலைமைகளைக் கையாள வேண்டியுள்ளது.

அகன்ற பலஸ்தீனம் என்பது முஸ்லிம்களின் புனித பூமி என்பது உலகுக்கே தெரியும். ஆனால், அங்கு இஸ்லாமியர்கள் மட்டுமன்றி கிறிஸ்தவர்களும் அருகில் யூதர்களும் வாழ்கின்றனர். சமகாலத்தில் பேதங்களைக் கடந்து உலகமே இந்த மக்களுக்காக எழுந்து நிற்பதைக் காண்கின்றோம்.

அதுபோலவே, இலங்கையில் அண்மைக்காலமாக ஒருவித இன, மத நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்பட்டு வருகின்றது. பலஸ்தீனத்தில் நடப்பது அநியாயம், அட்டூழியம் என்றுதான் சிங்கள, கிறிஸ்தவ, தமிழ் மக்களில் 99 சதவீதமானோர் கருதுகின்றனர்.

எனவே, இந்த மாற்றத்தை சதுர்யமாக பயன்படுத்த வேண்டுமே தவிர, மீதமுள்ள 1 சதவீதமான முட்டாள்களுக்கு விளக்கமளிக்கும் தோரணையில், நிலைமைகளை யாரும் கெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.




## கல்வி சேவை விஸ்தரிப்பு

இலங்கையின் பிரபல்யமான டிபி கல்வி ஐடி கெம்பஸின் (DP Education IT Campus) கல்விச் சேவை கல்முனையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
குறித்த கல்வி நிலையம் தொடர்பான விளக்கம் அளிக்கும் ஊடகச் சந்திப்பும் அறிமுக நிகழ்வும் சாய்ந்தமருது டாக்டர். ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
தென் கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் றஸ்மி ஆதம்பாவா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தம்மிக மற்றும் பிரிசிலா பெரேரா அறக்கட்டளை நிறுவனத்தின் கல்வி நிலைய செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.



## ஆங்கில செயற்பாடு வகுப்பறை திறந்து வைப்பு!

நிவித்திகல–பேபொட்டுவ வித்தியாலயத்தில் 22 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆங்கில செயற்பாடு வகுப்பறை சனிக்கிழமை (04) சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது.
மேற்படி ஆங்கில செயற்பாடு வகுப்பறை பெரும்பாலானவை சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளிலேயே நிறுவப்பட்டுள்ளன.

– சிவா ஸ்ரீதரராவ்

## ‘அற்றார் அழி பசி தீர்த்தல்’

பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியுள்ள குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகளை வழங்கும் ‘அற்றார் அழி பசி தீர்த்தல்’ என்ற திட்டத்தைத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் செயற்படுத்தி வருகிறது.
‘பகிர்ந்துண்டு வாழ்வோம்’ என்ற கருப்பொருளில் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம் அரியாலையில் ஞாயிற்றுக்கிழமை (05) முன்னெடுக்கப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தெரிவு செய்யப்பட்ட 50 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

– பு.கஜிந்தன்





## சிறுவர் தின நிகழ்வு

கிழக்கு மாகாணத்திலுள்ள 51 சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் 1204 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதுதவிர அரச பாதுகாப்பு 4 இல்லங்களில் 45 பிள்ளைகளும் பராமரிக்கப்படுவதாக கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் றிஸ்வானி றிபாஸ் தெரிவித்தார்.
உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு “எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள்” எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண மட்ட சிறுவர் தின நிகழ்வு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (05) இடம்பெற்றது.

– அபு அலா





## வீடுகள் கையளிப்பு

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ் சமுர்த்தி பயனாளிகளுக்கு ஜயவிமன செயற்றிட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் உரிய பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட்டன.
திருக்கோவில் பிரதேச சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.அரசரெட்ணம் தலைமையில் சனிக்கிழமை (04) இடம்பெற்றது.
இந்த வீடுகள் தம்பிலுவில் –01 மேற்கு மற்றும் விநாயகபுரம் –01 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் ஜயவிமன செயற்றிட்டத்தின் கீழ் பூரணபடுத்தப்பட்டது.

– வி.ரி. சகாதேவராஜா




## பெயர் பலகை திறப்பு விழா

நுவரெலியா – நானுஓயா நாவலர் கல்லூரியில் பெயர்ப் பலகை திறப்பு விழா மற்றும் ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.
குறித்த கல்லூரியின் 2007ஆம் வருடம் சாதாரண தரத்தில் பயின்ற மாணவர்களால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. கல்லூரியின் அதிபர் நவரத்னராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாடசாலையின் புதிய பெயர்ப் பலகை திறந்து வைக்கப்பட்டதோடு, பாடசாலை விளையாட்டுத் துறைக்கான சீருடை மற்றும் ஆசிரியர்களுக்கான கௌரவிப்பும், நினைவுப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.
இந்நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் அரங்கேறியதோடு பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

– நீலமேகம் பிரசாந்த்




## கடின பந்து அணியின் மேலங்கி அறிமுகம்

நாடளாவிய ரீதியில் நீண்ட காலமாக கடினபந்து விளையாடி வரும் திருகோணமலை – தோப்பூர் றியல் பைட்டர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 16 வருட நிறைவையொட்டி புதிய T shirt அறிமுக நிகழ்வு அல்ஹம்றா மத்திய கல்லூரியில் மிகச் சிறப்பாக ஞாயிற்றுக்கிழமை (05) இடம்பெற்றது.
இதன்போது வீரர்கள், முகாமைத்துவ பிரிவினர்களுக்கான மேலங்கிகள் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. மேலும் இதற்காக நோர்வே நாட்டில் வசிக்கும் தமிழ் செல்வந்தர் ஜெகதீஸ் மற்றும் ஏ.ஜே.இல்ஹாம் ஆகியோர் உதவிகளை வழங்கியிருந்தனர்.

– தீஷான் அஹமட்

## ஒல்லி அழகி



பொலிவூட் சினிமாவில் முன்னணி இளம் நடிகையாக வலம் வருபவர் நடிகை அனன்யா பாண்டே. இந்தியில் “ஸ்டூடண்ட் ஆப் தி இயர் 2” படத்தில் மூலம் நடிகையாக அறிமுகமானார். இவர் பிரபல நடிகர் சங்கி பாண்டேவின் மகள் ஆவார். 2022இல் “லைக்கர்” என்ற படத்தின் மூலம் தெலுங்கு சினிமாவில் அறிமுகமான இவர், “ட்ரிம் கேர்ள் 2” என்ற படத்தில் நடித்துப் பிரபலமானார்.
சமூக வலைத்தளங்களில் மிகவும் ஆக்ட்டிவாக இருக்கும் அனன்யா, அவ்வவ்போது போட்டோஷூட் எடுத்து இளசுகளை மயக்கி வருகிறார். தற்போது அவரது ஒல்லி அழகை கவர்ச்சியாக காட்டி வருவதால் லைக்குகள் குவிந்து வருகின்றன.

## டஃப் கொடுக்கும் ஆர்த்தி ரவி



ஜெயம் படத்தில் நடித்த ரவி மோகன், ஜெயம் ரவியாக மாறினார். முதல் திரைப்படமே ஹிட் ஆனதையடுத்து, வித்தியாசமான கதையமைப்பை கொண்ட படங்களில் நடித்து வருகிறார். இவர், 2009ஆம் ஆண்டில் ஆர்த்தி என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர்.
மகன் பிறந்த பின்னரும் அழகு குறையாமல் அப்படியே இருக்கும் ஆர்த்தி ரவி, அவ்வப்போது சமூகவலைத்தள பக்கங்களில் தனது அழகழகான புகைப்படங்களை பதிவேற்றம் செய்து வருகிறார்.
அந்தவகையில், தற்போது டிசண்டான மாடர்ன் லுக்கில் ஹீரோயின்களுக்கே டஃப் கொடுக்கும் வகையில் செம அழகாக போஸ் கொடுத்த புகைப்படங்களை வெளியிட்டு சமூகவலைதளவாசிகளின் கவனத்தை கவர்ந்திழுத்து விட்டார். இந்த புகைப்படங்களுக்கு தாறுமாறான லைக்ஸ் மற்றும் கமெண்ட்ஸ்கள் குவிந்து வருகிறது.

## பிங் உடையில் தத்தா



கொல்கத்தாவை சேர்ந்த தமிழ் பேசத்தெரியாத பெண்ணாக தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர் ஐஸ்வர்யா தத்தா. இவர் 2015இல் வெளியான “தமிழுக்கு எண் ஒன்றை அழுத்தவும்” திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் புகழ் பெற்றவர்.
ஐஸ்வர்யா தத்தாவின் முதல் படமே மாபெரும் ஹிட் அடித்ததை தொடர்ந்து “பாயும் புலி”, “ஆறாது சினம்”, “மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன”, “காபி வித் காதல்” போன்ற படங்களில் நடித்துள்ளார்.
அத்துடன், இவர் பிரபல ரியாலிட்டி ஷோவான பிக் பாஸ் நிகழ்ச்சியில் போட்டியாளராக பங்குபெற்று 2ஆம் இடத்தை பிடித்தார்.
நடிப்பது ஒருபுறம் இருந்தாலும், இன்ஸ்டாகிராமில் அடிக்கடி கவர்ச்சி புகைப்படங்களை வெளியிட்டு ரசிகர்களை குஷிப்படுத்தி வருகிறார்.
அந்தவகையில் தற்போது பிங்க் நிற கவர்ச்சி உடையணிந்து கிளாமர் தெறிக்க போஸ் கொடுத்து ரசிகரகளின் ரசனைக்கு ஆளாகியுள்ளார்.

## நர்ஸாக மாறும் ஐஸ்வர்யா



அறிமுக இயக்குநர் ரா.சவரி முத்து இயக்கத்தில் புதிய படம் ஒன்று உருவாகுகிறது. டார்லிங்க், இரும்புத்திரை, அண்ணாத்தே, ஹீரோ, மற்றும் மார்க் ஆண்டனி படங்களில் திரைக்கதை எழுத்தாளராக பணியாற்றிய ரா.சவரி முத்து, இப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார்.
இந்த படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ் முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கிறார். மேலும், யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி, சுனில் ரெட்டி, சந்தான பாரதி, அர்ஜுன் சிதம்பரம், பக்ஸ், சேஷு, மாறன், ஆதித்யா கதிர், கராத்தே கார்த்தி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.
மருத்துவமனையில் நர்ஸாக வேலை பார்க்கும் ஒரு பெண்ணின் வாழ்வில் நடக்கும் சம்பவங்களை கலகலப்பான கொமடியுடன், பரபரப்பான திரைக்கதையுடன் அமையப்பெறவுள்ள இந்த படத்தை துவாரகா புரொடக்ஷன்ஸ் (Dwarka Productions) நிறுவனம் சார்பில் பிளேஸ் கண்ணன் - ஸ்ரீலதா பிளேஸ் கண்ணன் தயாரிக்கின்றனர்.

# இடைவிடாத தாக்குதல்; ஐ.நா வேதனை



இஸ்ரேல் - ஹமாஸ் போர் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகிறது. காசாவில் இஸ்ரேலியப் படைகள் இடைவிடாது தாக்குதல் நடத்துவதால் அங்கு மீண்டும் தொலைத்தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. ஒரே மாதத்தில் 3ஆவது முறையாக இவ்வாறு தொலைத்தொடர்பு அங்கு முடக்கப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை (05) காசாவில் அகதிகள் முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில் இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி செய்தியாளர்களை சந்தித்தபோது, "காசாவில் வடக்கு, தெற்கு எல்லாம் இப்போது இல்லை. மொத்த காசாவும் இரண்டாகப் பிரிந்துள்ளது. நாங்கள் காசாவை சூழ்ந்துவிட்டோம். இன்னும் 48 மணி நேரம் தான் காசா நகருக்குள் இஸ்ரேலியப் படைகள் நுழைந்துவிடும்" என்று எச்சரித்துள்ளார்.

காசா மீதான இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை 88 ஐ.நா. ஊழியர்கள் உயிரிழந்துள்ளதாக ஐ.நா. திங்கட்கிழமை (06) வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் UNRWA என்ற பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. முகமையைச் சேர்ந்தவர்களாவர். ஒரே போரில் இத்தனை ஐ.நா. ஊழியர்கள் உயிரிழந்திருப்பது வேதனை என்று ஐ.நா. தெரிவித்துள்ளது. மேலும், தற்போதைய சூழலில் மனிதாபிமான அடிப்படையில் காசாவில் உடனடியாக போர் நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

## "பெயரை மாற்றினால் ஒரு பில்லியன் கொடுக்க தயார்"

ஃபேஸ்புக் நிறுவுனர் மார்க் சக்கர்பர்க்கைக்கும் எலான் மஸ்கிற்க்கும் இடையே பல பிரச்சினைகள் ஓடிக் கொண்டிருக்கும் நிலையில், ஃபேஸ்புக் நிறுவனத்தின் பெயரை மாற்றினால் மார்க் சக்கர்பெர்க்கிற்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் தருவதாக எலான் மஸ்க் உறுதி அழித்துள்ளார்.

எலான் மஸ்கின் இந்த அறிவிப்பு குறித்து முதலில் பகடியான செய்திகளை வெளியிடும் பாபிலோன் பீ (BabylonBee) என்ற தளம்தான் வெளியிட்டிருந்தது. இது உண்மைதான் என உறுதி செய்துள்ள மஸ்க், 'ஃபேஸ்பூப்' என பெயர் வைத்தால் சரியாக இருக்கும் என்றும் கூறியுள்ளார்.



## இஸ்ரேல்

## "காசா முனையை இரண்டாக பிரித்து விட்டோம்"

இஸ்ரேல்- காசா முனை பகுதி மீது நடத்தி வரும் போரில் இதுவரை சுமார் 9770 பேருக்கு மேற்பட்ட பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதாக பலஸ்தீன சுகாதார துறை அமைச்சர் தெரிவித்தார்.

பல உலக நாடுகளின் தலைவர்கள் போர் நிறுத்துமாறு கோரிக்கையை விடுத்திருந்தனர். ஆனால், "ஒக்டோபர் 7 அன்று பணயக் கைதிகளாகப் பிடித்து சென்றவர்களை ஹமாஸ் விடுவிக்காத வரை போர் நிறுத்தம் எனும் பேச்சிற்கே இடமில்லை. நாங்கள் வெற்றி பெறும் வரை போரை தொடர்ந்து நடத்தியாக வேண்டும்" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு உறுதிபட தெரிவித்திருந்தார்.

இப்பின்னணியில் இஸ்ரேலிய இராணுவ படைகளின் (IDF) செய்தித்தொடர்பாளர் ரியர் அட்மிரல் டேனியல் ஹகரி கூறுகையில், முக்கியமான இடங்களில் தாக்குதல்களைத் தொடர்கிறோம். காசா முனை பகுதியை முற்றிலுமாக சுற்றி வளைத்து விட்டோம். அதனை இரண்டாகப் பிரித்து விட்டோம். இப்போது காசா, வடக்கு காசா மற்றும் தெற்கு காசா என இரண்டாகி விட்டது என்றார்.



## புதுடெல்லி


# காற்று மாசு அபாயம்



என்.சி.ஆர் மண்டலத்தில் காற்றின் தரம் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. திங்கட்கிழமை (06) நிலைவரப்படி புதுடெல்லியில் காற்றின் தரக் குறியீடு (Air Quality Index - AQI) 488 ஆக உள்ளது. இந்த நிலையை எட்டும்போது, மாசுபாடுடைய காற்றை மக்கள் சுவாசித்தால் சுவாசப் பிரச்சினைகள், ஆஸ்துமா உள்ளிட்ட பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படும். இதன் காரணமாகவே மாசுபாடு அடைவதைத் தடுத்து காற்றின் தரத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், புதுடெல்லியில் அதிகரித்துள்ள 'மிகக் கடுமை' அளவுள்ள மாசு, அனைத்து வயதினரையும் நுரையீரல் மட்டுமல்லாது, இதயம், மூளை போன்ற பிற முக்கிய உறுப்புகளையும் பாதிப்படையச் செய்யும் என டெல்லியைச் சேர்ந்த மருத்துவர்கள் மக்களை எச்சரித்துள்ளனர்.

இதுபற்றி மருத்துவர்கள் மேலும், மாசுபாடு அதிகரித்ததன் விளைவாகத் தலைவலி, பதற்றம், எரிச்சல், குழப்பம் மற்றும் நினைவாற்றல் திறன் குறைதல் போன்ற நிகழ்வுகள் திடீரென அதிகரித்துள்ளன. குறிப்பாக வயதானவர்கள், பாடசாலை செல்லும் பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் போன்றவர்களை அதிகம் பாதிப்படையச் செய்கிறது என தெரிவித்துள்ளனர்.



## கர்நாடகா

# மணப்பெண் தேடி பாதயாத்திரை

தற்போதைய காலகட்டத்தில் திருமண விடயங்களில் பெண்களின் எதிர்பார்ப்பு கூடுதலாக உள்ளது. தங்களது வருங்கால கணவர், சொந்த வாகனம், வீடு வைத்திருப்பவராக இருக்க வேண்டும் என நினைக்கின்றனர். இதன் காரணமாக நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த பெரும்பாலான இளைஞர்கள் திருமணத்துக்குப் பெண் கிடைக்காமல் உள்ளனர்.

கர்நாடகா மாநிலம், சாம்ராஜ்நகர் குண்டுலுபேட் கோடஹள்ளி கிராமத்தில், விவசாயம் செய்யும் இளைஞர்களுக்கு திருமணம் செய்ய பெண் கிடைப்பதில்லை. விவசாயம் செய்வதால் அவர்களுக்குப் பெண் கொடுக்க சிலர் தயக்கம் காட்டுவதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், கோடஹள்ளி கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் 160 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மாதேஸ்வரம் கோவிலுக்குப் பாதயாத்திரையாகச் சென்று வழிபட்டுள்ளனர். தங்களுக்குத் திருமணம் செய்யப் பெண் கிடைக்கவும் நல்ல மழை பெய்ய வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டதாகக் கூறப்படுகிறது.



# சுனில் நரைன் ஓய்வு சர்வதேச கிரிக்கெட்

போட்டிகளிலிருந்து மேற்கிந்தியத் தீவுகளின் சுழற்பந்துவீச்சாளரான சுனில் நரைன் ஓய்வு பெற்றுள்ளார்.

இறுதியாக கடந்த 2019ஆம் ஆண்டே மேற்கிந்தியத் தீவுகளுக்காக இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியொன்றில் விளையாடிய நரைன், 51 இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டிகளில் 52 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

கடந்த 2011ஆம் ஆண்டு அறிமுகமாகி ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 65 போட்டிகளில் 92 விக்கெட்டுகளை வீழ்த்திய 36 வயதான நரைன், இறுதியாக 2016ஆம் ஆண்டே ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடியிருந்தார்.

தவிர, ஆறு டெஸ்ட் போட்டிகளில் 21 விக்கெட்டுகளை நரைன் வீழ்த்தியிருந்தார்.

## பிரேஸிலிய குரான் பிறீ:

# வென்ற வெர்ஸ்டப்பன்

பிரேஸிலிய குரான் பிறீயானது நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நிலையில், பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார்.

இதேவேளை, பந்தயத்தை ஆறாமிடத்திலிருந்து ஆரம்பித்த மக்லரென் அணியின் லான்டோ நொரிஸ் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை நான்காமிடத்திலிருந்து ஆரம்பித்த அஸ்தன் மார்டின் அணியின் பெர்ணாண்டோ அலோன்ஸோ மூன்றாமிடத்தைப் பெற்றார்.

இந்நிலையில், இப்பந்தய முடிவில் இவ்வாண்டுக்கான சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் தான் சம்பியனானவதை ஏற்கெனவே உறுதிப்படுத்தியுள்ள நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பன் 524 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் காணப்படுகின்றார். இரண்டாமிடத்தில் 258 புள்ளிகளுடன் வெர்ஸ்டப்பனின் சக றெட் புல் அணி ஓட்டுநரான சேர்ஜியோ பெரேஸ் காணப்படுகின்றார்.

மூன்றாமிடத்தில் மெர்சிடிஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன் 226 புள்ளிகளுடன் காணப்படுகின்றார்.



## உலகக் கிண்ணம்: புள்ளிகள் பட்டியலில்

# இந்தியா முதலிடம்



சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரின் புள்ளிகள் பட்டியலில் முதலாமிடத்தை, தொடரை நடத்தும் நாடான இந்தியா உறுதிப்படுத்தியுள்ளது. கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே புள்ளிகள் பட்டியலில் முதலாமிடத்தை இந்தியா உறுதிப்படுத்தியுள்ளது. இந்தியா விளையாடிய எட்டுப் போட்டிகளிலும் வென்று 16 புள்ளிகளைப் பெற்றுள்ள நிலையில், மற்றைய அணிகள் எஞ்சியுள்ள தங்களது அனைத்துப் போட்டிகளில் வென்றாலும் அதிகபட்சமாக தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகியன 14 புள்ளிகளை மாத்திரமே பெற முடியும்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 326/5 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி ஆ.இ 101 (121), ஷ்ரேயாஸ் ஐயர் 77 (87), றோஹித் ஷர்மா 40 (24), இரவீந்திர ஜடேஜா ஆ.இ 29 (15), ஷுப்மன் கில் 23 (24), சூரியகுமார் யாதவ் 22 (14) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: கேஷவ் மஹராஜ் 1/30, ககிஸோ றபாடா 1/48)

தென்னாபிரிக்கா: 83/10 (27.1 ஓவ. )
(பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 5/33, குல்தீப் யாதவ் 2/7, மொஹமட் ஷமி 2/18, மொஹமட் சிராஜ் 1/11)

போட்டியின் நாயகன்: விராட் கோலி

இந்நிலையில் மும்பையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஆப்கானிஸ்தானை அவுஸ்திரேலியா எதிர்கொள்ளவுள்ளது.

# விளையாட்டு விழா

■ வ.சக்தி

"சிறுவர்களே முதன்மையானவர்கள்" எனும் தொணிப்பொருளின் கீழ் மட்டக்களப்பு, குருமண்வெளி சித்தி விநாயகர் பாலர் பாடசாலை மாணவர்களின் விளையாட்டு விழா குருமண்வெளி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ந.சுதாகரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மண்முனை தென் எருவில் பற்று முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் அருந்ததி சிவரெத்தினம், கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் தெ.நவநாயகம், பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் முன்பள்ளி இணைப்பாளர் உ.கோகுலராஜ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களான க.புவிதரன், செ.சத்தியநாதன் மற்றும் பெற்றோர்கள், பொதுமக்கள், சிறுவர்கள், எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, முன்பள்ளி மாணவர்களிடையே மிட்டாய் ஓட்டம், கயிறு இழுத்தல், நிறப்பந்து தெரிதல், சங்கீதக் கதிரை, 30 மீற்றர் ஓட்டம் போன்ற விளையாட்டுக்கள் இடம்பெற்றன. இதன்போது பங்கேற்ற சிறார்களுக்கு அதிதிகளால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 07 நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.